Hindus and we believe still in Gods, in spite of this Government. We still have religious qualities. May I know your decision in this regard ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அரசாங்க அலுவலகங்களுக்கு விடுமுறையா, இல்லையா என்பதைப்பற்றி முடிவு செய்வது இந்த அவையினுடைய பொறுப்பு அல்ல. இரண்டாவது, சபைக்கு விடுமுறை வேண்டுமா, வேண்டாமா என்பது பற்றி முடிவு செய்வதற்கு அலுவல் ஆய்வுக் குழு இருக்கிறது. அலுவல் ஆய்வுக் குழுவில் அதைப்பற்றி முடிவு செய்யலாமே தவிர இந்த மன்றம் அதைப்பற்றி முடிவு செய்யத் தேவையில்லை.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அன்றையதினம் விடுமுறை உண்டா என்பதைப்பற்றி இன்னும் ஒரு மணி நேரத்தில் நான் கருத்து அறிந்து தெரிவிக்கிறேன்.

4. கவன ஈர்ப்பு

(i) விஞ்ஞான மந்திர்கள் மூடப்பட்டதால் ஏற்பட்டுள்ள நிலை

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் கிராமப்புற மக்கள் மத்தியில் விஞ்ஞான அறிவையும் நவீன விவசாயத் தொழில் முறையையும் புகுத்துவதற்கு ஏற்படுத்தப்பட்டிருந்த "விஞ்ஞான மந்திர்"களை தற்போதிருக்கும் அரசு மூடியிருப்பதால் விவசாயிகள், கிராமப்புற மக்கள் ஆகியோருக்கு ஏற்பட்டுள்ள நிலைபற்றிய அவசர பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. செ. மாதவன் :** விஞ்ஞான மந்திர்கள் தமிழகத்தில் 6 இடங்களில் செயல்பட்டன. (1) ஆரியக்கவுண்டன்பட்டி (சேலம்), (2) பெரியநாயக்கன்பாளையம் (கோவை), (3) எஸ். வி. நகரம் (வட ஆர்க்காடு), (4) தே. கல்லுப்பட்டி (மதுரை), (5) வளவனூர் (தென் ஆர்க்காடு), (6) குருக்கத்தி (தஞ்சை).

மத்திய அரசால் இவை ஆரம்பிக்கப்பட்டு சில ஆண்டுகளுக்குப் பின் 1963-ம் ஆண்டு இவை மாநில அரசுக்கு மாற்றப்பட்டு கல்வித்துறை நிர்வாகத்தில் வந்தன. 1966-ல் இவை உள்ளாட்சித் துறைக்கு மாற்றப்பட்டன. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிந்த பின்னர் மத்திய அரசு இந்த விஞ்ஞான மந்திர்கட்குக் கொடுத்து வந்த உதவித் தொகையை நிறுத்திவிட்டது.

இந்த விஞ்ஞான மந்திர்களின் நோக்கங்கள் உயர்ந்தவையாக இருந்த போதிலும் இவை (effective-ஆக) திறம்பட்ட முறையில் செயல்படவில்லை. இவை செயல்படும் முறையை ஆராய R.D. and L.A -யைச் சேர்ந்த அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்று சமீபத்தில் விஞ்ஞான மந்திர்களை எல்லாம் பார்வையிட்டு அதன் அறிக்கையைக் கொடுத்தது. எல்லா இடங்களிலும் இம்மந்திர்கள் செயல்படும் முறையில் குறைகள் காணப்பட்டன. இவற்றின் முக்கிய வேலையான மண்வள சோதனை (Soil Test) இரத்த, மூத்திர சோதனை (Blood, Urine and Pathological analysis) இவற்றைச் செய்ய பூரண வசதிகள் இல்லை எனவும் காணப்பட்டது. இதிலுள்ள அதிகாரிகள் எம்.எஸ்.ஸி. படித்தவர்கள். ஆனால், இவர்களுக்குத் தளவாடங்கள் இல்லாத குறையாலும், இவர்களுடன் தொடர்ந்து வேலை செய்யும் அலுவலர்கள் (follow up work) இல்லாததாலும் இவர்கள் வேலை பயன்படவில்லை. விஞ்ஞான மந்திர்கள் எடுபட்டதால் கிராமத்துக்கு பெரு நஷ்டம் ஏற்படாது. மண்வள சோதனைகளை விவசாய இலாகாவே இப்போது செய்கிறது. அதற்காகத் தனியாக நிறுவனம் தேவையில்லை. தவிர, Rural Extension Training Centre (R.E.T C.)களும் இந்த வேலையைச் செய்ய முற்படும். Identification of pest and diseases விவசாயப் பயிர் நோய்களைக் கண்டுபிடித்து ஆவன செய்யும் வேலையை விவசாய இலாகாவும் கிராம சேவக்குகளும் செய்து வருகிறார்கள். விஞ்ஞான

1968 ஆகஸ்ட் 24] [திரு. செ. மாதவன்]

மந்திர்களில் உள்ள தளவாடங்கள் R.E.T.C.-க்களுக்குத்தான் போகின்றன. சிறந்த முறையில் பயன்படாத இந்த நிறுவனங்களை மூடுவதால் கிராம மக்களுக்குத் தொந்திரவு எதும் வராது. மத்திய அரசால் ஆரம்பிக்கப்பட்டு, பிறகு மாநில அரசுக்கு வந்த இந்த நிறுவனங்களுக்கு உதவித் தொகைகளையும் மத்திய அரசு இப்போது நிறுத்தி விட்டதால் இவை மூடவேண்டியது பற்றி ஆலோசித்தலில் தவறில்லை.

திரு. கே. பி. எஸ். மணி : ஆன் எ பாயிண்டு ஆப் இன்பர்மேஷன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பாயிண்டு ஆப் இன்பர்மேஷனுக்கு இதில் ஒன்றும் இடமில்லை. அமைச்சர் அவர்கள் ஸ்டேட்மெண்டு படித்திருக்கிறார்கள். எந்த உறுப்பினர் 41-வது விதியின் கீழ் அறிவிக்கை கொடுத்திருந்தாரோ அவர் ஒரு கேள்வி கேட்க இடம் கொடுக்கலாம். மற்றவர்கள் கேள்வி கேட்க விதி இடம் கொடுக்கவில்லை.

திரு. கே. பி. எஸ். மணி : விஞ்ஞான மந்திர் என்றால் என்னவென்று எனக்குத் தெரியவில்லை. அதற்காகத்தான் கேட்டேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : "மந்திர்" என்றால் ஆலயம் என்று பொருள் என்ற விவரத்தைத் தங்கள் மூலம் உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த ஆசிய ஜோதி, அமரர் நேரு அவர்கள் மிகவும் உயர்ந்த நோக்கத்தோடு இந்த விஞ்ஞான மந்திர்களை ஏற்படுத்தினார்கள். இது பொதுவாக ஒரு இலாக்காவிடம் இருப்பதைவிட, மேலும் பயனுள்ள வகையில் செயல்படுவதற்கு, இந்த விஞ்ஞான மந்திர்களை மண்வளப் பாதுகாப்புக்காக ஒதுக்குவதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : விஞ்ஞான மந்திர்கள் மத்திய அரசினால் துவக்கப்பட்டன என்பது உண்மை. அவர்கள் கொஞ்சம் பண உதவியும் செய்து கொண்டுவந்தார்கள். அமரருடைய வாரிசுகளே அந்த உதவியை நிறுத்திவிட்டார்கள். அதற்குப் பின்னாலே நாம் அதை எப்படிச் செய்வது என்பது ஆராயப்பட்டது. இந்த மந்திர்கள் செய்துவந்த செயல்களையெல்லாம் நம்முடைய இலாகாக்களே செய்துவருகின்றன என்ற காரணத்தினால், இதிலிருக்கக்கூடிய எக்விப்மெண்டஸ், தளவாடங்களை அந்தந்த இலாகாவுக்கே கொடுத்து, இந்தத் திட்டங்களை மற்ற இலாகாக்களே மேற்கொண்டு செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது.

(ii) சென்னை புதுக்கல்லூரியில் மாலை வகுப்புகள் தொடங்கத் தடை.

Dr. H. V. HANDE : I call the attention of the Hon. Minister for Education to a matter of urgent public importance, namely, the order of the University prohibiting New College, Madras from starting evening college classes, even though the college has already accepted a number of applications for the same.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அவைத் தலைவர் அவர்களே, இவ்வறிவிப்பில் விவரித்துள்ள பொருள் சட்டப்படி நிறுவியுள்ள சென்னைப் பல்கலைக்கழகம் மட்டுமே முடிவு செய்ய வேண்டிய ஒன்றாகும். பல்கலைக்கழகத்திடமிருந்து இது பற்றித் தெரிந்து கொண்ட விவரம் வருமாறு.